***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.384/2013 – P.W. 2***

| | |
|---|---|
| *Name* | நஜீமா ராணி மருத்துவர்<br>மதுரை கிழக்கு வட்டார மருத்துவ அலுவலர். |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | |

**2,3,4,5 வது எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.11.2025.*

***புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மதுரை கிழக்கு வட்டார மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 21.05.2011ம் தேதியன்று மாவட்ட அரசு மருத்துவமனை மன்னார்குடியில் 24 மணி நேர பணியில் இருந்தபோது திருமதி,லெட்சுமிபிரபா வயது 44 மதிக்கத்தக்க பெண்மணி மகேஷ் என்பவரால் 01.35 p.m. மணிக்கு அழைத்து வரப்பெற்றார். அவரை நான் பரிசோதித்தபோது 20.05.2011ம் தேதியன்று பட்டக்கார தெருவில் இரவு 10.30 மணிக்கு தெரிந்த 7 நபர்கள் கையாலும், கட்டையாலும் அடித்ததாக கூறினார். அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. கழுத்திலும் முதுகிலும் வலி இருப்பதாக கூறினார்.
2. வலது காதில் வலி மற்றும் காது கேட்கவில்லை என்று கூறினார்.
3. தொண்டையில் வலியும் பேச கஷ்டமாக உள்ளதாகவும் கூறினார்.
4. வலது பாதத்தில் வலி இருப்பதாக கூறினார்.

மேற்கண்ட காயங்களுக்காக ENT மருத்துவருடைய கருத்துரைக்காக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு Refer செய்து அனுப்பி வைத்தேன். நோயாளி

அங்கு செல்ல விரும்பம் இல்லை என்று கூறிவிட்டதால் நானே உள்நோயாளியாக அனுமதித்து 23.05.2011ம் தேதியன்று மறுபடியும் refer செய்யப்பட்டுள்ளார். அவர் மருத்துவமனைக்கு சென்றதற்கான ஆவணங்கள் இல்லை. அவர் refer செய்த மருத்துவமனைக்கு மருத்துவ சிகிச்சைக்கு செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்று வழங்கவில்லை. **நான் பதிவு செய்த விபத்து பதிவேடு அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

20.05.2011 தேதியன்று தாக்கப்பட்டு மறுநாள் 21.05.2011ம் தேதி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டார் என்றால் அவர் வந்த நேரத்தில் தான் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வெளிப்படையான காயங்கள் இல்லை என்றால் சரிதான். ஆனால் குறிப்பிட்ட காயங்கள் தவிர வலது தோள்பட்டையில் காயம் இருந்ததாக காயம்பட்ட நபர் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் குறித்திருப்பேன்.

வலி இல்லாமல் கூட இருப்பதாக கூறலாம் என்றால் கூறுவதற்கு வாய்ப்புண்டு. 7 நபர்கள் கட்டையாலும், கையாலும் தாக்கியிருந்தால் அந்த காயம்பட்ட நபருக்கு இரத்தகாயம் ஏற்பட்டியிருக்கும் என்றால் இருக்கலாம். ஆனால் அதுபோல் காயம் இல்லை. மன்னார்குடி அரசு மருத்துவமனையிலே நுண்கதிர் படம் எடுப்பதற்கான வசதி உண்டு என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.